<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 13/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : அமுதா | க/பெ. | : வெள்ளைச்சாமி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : சோழகுளத்துப்பட்டி |
| தேதி | : 11.08.2025 | வயது | : 38/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் நான்கில் ஒரு பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன். வேறு பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு 2012 ம் வருடம் திருமணம் ஆனது அப்பொழுது எனக்கு வயது 23 ஆகும். நான் 1 ம் பிரதிவாதியான ராமன் என்பவருடன் தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஒரு சொத்தைப் பொறுத்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அதன் சர்வே எண் 20/14A ஆகும். இந்த சர்வே எண்ணை தவிர்த்து மேலும் பல சொத்துக்கள் பூர்வீக சொத்தாக உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

3) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் நல்லியப்பன் மனைவி அழகி, நல்லியப்பன் மகன் ராஜேந்திரன், நல்லியப்பன் மகன் அழகி, நல்லியப்பன் மகன் லட்சுமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்ட நல்லியப்பன் என்பவர் எனது பெரியப்பா ஆவார். மேற்படி ஆவணமானது 19.09.2023 ம் தேதி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கான விபரத்தை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின்

விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி எதிர் வழக்குரை சாராம்சங்களை மறுத்து ரிப்ளை ஸ்டேட்மென்ட் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணமானது 14.09.2023ம் தேதி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிடை சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளிடம் சொத்தை பிரித்து தர சொல்லி எந்த தேதியில் கேட்டேன் என்று பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு 01.09.2023ம் தேதி கிரையம் செய்து கொடுத்தது தொடர்பாக எப்படி எனக்கு தெரிய வந்தது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார், ராமனின் தகப்பனார் சர்க்கரை நல்லியப்பனுக்கு வாரிசுகள் யார் யார் என்றால் நல்லியப்பன், ராமன், லக்கன், நல்லியம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள் .

5) நல்லியப்பன், லக்கன், நல்லியம்மாள் ஆகியோரை இந்த வழக்கில் கட்சி காரராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. நல்லியப்பன் என்பவர் வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களை பாகம் பிரித்து தரக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் சாட்சி முதலில் திண்டுக்கல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துவிட்டு தற்பொழுது மதுரை

உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கிறார். அந்த வழக்கின் வழக்கு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அந்த வழக்கிற்கான நகல் வீட்டில் உள்ளது அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6) நல்லியப்பன், லக்கன் மற்றும் நல்லியம்மாள் ஆகியோர் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றாலும், அவர்களை இந்த வழக்கில் கட்சி சேக்காத தோஷத்தால் வழக்கு பாதிப்படைந்துள்ளது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் அவர்களுக்குரிய சொத்தை விற்றுவிட்டார்கள், நான் எனது தந்தைக்குரிய சொத்தில் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கிடை சொத்தானது பூர்வீக சொத்து என்றால் சரிதான்.

7) எனது தந்தை இந்த வழக்கில் எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யாமல் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது தந்தையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அவருடன் சேர்ந்து கொலுசிவாக இருந்து கொண்டு அதிக பணம் கேட்டு மோசடி செய்ய வேண்டும் என்று 3ம் பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ராமன் என்பவரை இந்த வழக்கில் விசாரித்தால் வழக்கின் உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது தந்தையை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய நான் தயாராக உள்ளேன்.

8) எனக்கு நத்தம் திரு.சுப.இளவரசு என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 07.10.2016ம் தேதி எனது சார்பாக மூன்றாம் பிரதிவாதிக்கு

வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அந்த அறிவிப்பில் கிரைய ஆவணத்தை ரத்து செய்ய சொல்லி தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் தெரியாது. மேற்படி வழக்கறிஞரை விசாரணை செய்தால் அறிவிப்பானது யார் சொல்லி அனுப்பப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் அந்த வழக்கறிஞரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை.

9) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு 19.10.2016 ஆம் தேதி 3ம் பிரதிவாதி அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. 2016 ஆம் வருடமே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளதால் வழக்கு கால தோஷத்தால் பாதிப்படையும் என்பதால் மேற்படி விபரங்களை மறைத்து பொய் சங்கதிகளை தெரிவித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 11.08.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.08.11 15:26:12 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.